## 2026 சட்டமன்றத் தேர்தலில் பாசிச - அடிமைக் கூட்டணியை வீழ்த்திட,

# கழக சார்பு அணிகள் அணி அணியாய் உழைத்திடுவோம்!

## தேனி தெற்கு – வடக்கு மாவட்டக் கழக சார்பு அணிகள் கலந்துரையாடலில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



**தேனி, ஜூன் 18-**

**தேனி மாவட்டம், வீரபாண்டியில் தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளை, தி.மு.க இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து, கலந்துரையாடினார்.**

**அப்போது அவர் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாசிச-அடிமைக் கூட்டணியை மீண்டுமொருமுறை வீழ்த்திட, கழக சார்பு அணிகள் அணி அணியாய் உழைத்திட வேண்டுமென அறிவுறுத்தினார்.**

**மேலும், ``2026-இல் கழக அணி 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வென்றது - கழகம் 7-வது முறை ஆட்சி அமைத்தது - நம் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார்கள்” என்னும் வரலாற்றைப் படைத்திட, அடுத்து வரும் ஒவ்வொரு மணித்துளியையும் கோல்டன் ஹவர் (Golden Hour) ஆக கருதி, சார்பு அணிகள் செயல்பட வேண்டும்” என்று எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**தி.மு.க இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரையின் விவரம் வருமாறு:**

நேரம் கிட்டத்தட்ட மதியம் 2 மணி ஆகிவிட்டது. உங்களின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி தெரிகிறதோ, அதே அளவுக்கு பசியும் தெரிகிறது. உங்களுக்கு பசிக்கிறதோ இல்லையோ, எனக்கு பசிக்கிறது. ஒரு மணி நேரம் தாமதமாக வந்து இருக்கிறேன். அதற்கு முதலில் எனது மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்.

### எங்கு பார்த்தாலும் வரவேற்பு

காலை 09.45 மணிக்கு தொடங்கி, பல்வேறு நிகழ்ச்சிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம், அங்கன்வாடியில் உள்ள ஆசிரியர்கள், குழந்தைகள், குழந்தைகளின் பெற்றோர்களுடன் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு இங்கு வந்திருக்கிறேன். இதற்கு இடையில் வரும் வழியில் எங்கு பார்த்தாலும் வரவேற்பு. அதனால்தான் இந்த தாமதம் ஏற்பட்டுவிட்டது.

நேற்று இரவு மதுரையில் இறங்கி, சாலை வழியாக தேனி மாவட்டத்திற்குள் நுழைந்தவுடன் எழுச்சியான வரவேற்பு. அதேபோல் இன்று காலையும், எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும், சாலை எங்கும் நீங்கள் கொடுத்த வரவேற்பிற்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தேனி மாவட்டத்திற்கு எப்போது வந்தாலும் ஒரு தனி உற்சாகம் ஏற்பட்டுவிடும். அதற்கு மிகமிக முக்கியமான காரணம் என்னவென்றால், தேனி மாவட்ட மக்களுக்கு மனதில் ஒன்று வைத்துக்கொண்டு, வெளியில் ஒன்று பேசத் தெரியாது. மனதில் பட்டதை அது சரியோ, தவறோ அதை அப்படியே பேசக்கூடியவர்கள்தான் தேனி மாவட்ட மக்கள். அப்படிப்பட்ட உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகப்பெருமையாக இருக்கிறது.

### சார்பு அணிகளுக்கு முக்கியத்துவம்

கழகத்தைப் பொறுத்தவரைக்கும் சார்பு அணிகளுக்கு என்று எப்போதுமே ஒரு முக்கியத்துவம் உண்டு. அதனால்தான் தலைவர் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அங்கு இருக்கின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளை அழைத்து சந்திக்கிறார்கள். எனக்கு தலைவர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டார்கள். `நான் மாவட்டக் கழக நிர்வாகிகளை சந்திக்கிறேன். நீ சென்று சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடு என்று கட்டளை இட்டுள்ளார். கடந்த இரண்டு வருடங்களாக நான் இளைஞர் அணிச் செயலாளர்தான். இருந்தாலும் சார்பு அணிகளுக்குப் பிரதிநிதியாக எல்லா மாவட்டங்களுக்கும் சென்று இந்தச் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கெடுத்து வருகிறேன்.

விழுப்புரம், தூத்துக்குடி, திருவாரூர், நாகப்பட்டினம் இப்படி பல மாவட்டங்களில் தொடர்ந்து சார்பு அணிகளைச் சந்தித்து வருகிறேன். அந்த வரிசையில் இன்றைக்கு தேனி மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளான உங்களைச் சந்திப்பதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி.

### கூடுதலாக இரண்டு அணிகள்

சார்பு அணி என்றால் கழகத்தைச் சார்ந்து இருக்கின்ற அணி என்று மட்டும் அர்த்தம் கிடையாது. கழகம் உங்களை சார்ந்து இருக்கிறது என்பதற்காகத்தான் இந்த அணிக்கு சார்பு அணி என்று பெயர். அதனால்தான் சமீபத்தில் மதுரையில் நடந்த பொதுக்குழுவில் தலைவர் அவர்கள் 23 அணிகள் என்பதை அதிகரித்து கூடுதலாக இரண்டு அணிகளை அறிவித்தார்கள். ஒன்று மாற்றுத்திறனாளிகள் அணி. எனக்கு தெரிந்து இந்தியாவிலேயே மாற்றுத்திறனாளிகள் அணி என்று ஒன்று ஆரம்பித்துள்ள கட்சி என்றால் அது நாம்தான். அது நம் தலைவரின் தொலைநோக்குப் பார்வை. இரண்டாவதாக, கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நிரூபிக்கின்ற வகையில், கல்வியாளர்கள் அணியை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

ஆகவே நீங்கள் எல்லோரும் சார்பு அணிகள் மட்டுமல்ல, நீங்கள் ஒவ்வொரு அணியும் சாதனைகள் அணி என்பதை நாம் உணர வேண்டும். ஆங்கிலத்தில் அணிகளை யூத் விங், ஸ்டூடண்ட் விங், ஐ.டி.விங் என்று சொல்வார்கள். ஆங்கிலத்தில் ‘விங்’ என்றால் சிறகுகள் என்று அர்த்தம். கழகம் இன்றைக்கு உயர, உயர பறந்துகொண்டு இருக்கிறது என்றால், அதற்கு ‘விங்ஸ்’ ஆகிய நீங்கள்தான் முழு காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

### இளைஞர் அணிதான்

நம் ஒவ்வொரு அணிக்கும் ஒரு சிறப்பு உண்டு. ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு உண்டு. மாணவர் அணியை எடுத்துக்கொண்டால் ‘இந்தி எதிப்பு’. நம் கழகத்தின் மாணவர் அணி இல்லாமல் தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்பு போராட்டமே கிடையாது. இளைஞர் அணி என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டின் இளைஞர்களை அரசியல்மயப்படுத்தியது நம் கழகத்தின் இளைஞர் அணிதான். இந்தியாவிலேயே முதன்முதலில் ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணியைத் தொடங்கியதும் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதைத் தொடங்கியவர் நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்.

சட்டத்துறையை எடுத்துக்கொண்டால், பல வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டும் வழிகாட்டவில்லை, தமிழ்நாட்டின் உரிமையை மட்டும் மீட்டுக்கொடுக்கவில்லை. இந்தியாவில் இருக்கின்ற அனைத்து முதலமைச்சர்களுக்கும், அனைத்து மாநிலங்களுக்கும் உரிமைகளை மீட்டுக் கொடுத்து இருக்கிறார் என்றால், அதற்கு மிக முக்கியமான காரணம் நமது சட்டத்துறை அணி. அதற்கு அந்த சிறப்பு உண்டு.

இப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு சிறப்பு உண்டு. ஆகவே நாம் அணிகள்தானே, நமக்கு என்ன இங்கு முக்கியத்துவம் இருக்கப்போகிறது என்ற நினைப்பே நம் யாருக்கும் துளியும் வரக்கூடாது. நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரத்தை சரியான நேரத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் வழங்குவார். அதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன.

### உழைத்து உயர்ந்தவர்கள்

இன்றைக்கு, பல அமைச்சர்கள், பல மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், நகர கழகச் செயலாளர்கள் பல அணிகளில் இருந்து உழைத்து உயர்ந்தவர்கள்தான். அதற்கு உங்கள் கண் முன்னே எடுத்துகாட்டுகள் இருக்கின்றன. ஏன், தமிழ்நாட்டிற்கு முதலமைச்சரைக் கொடுத்ததே நம் இளைஞர் அணிதான். அந்தப் பெருமை கழகத்திற்கு உண்டு. கழகத்தின் பொதுச்செயலாளரைக் கொடுத்தது மாணவர் அணி. இப்படி தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணிகளில் சிறப்பாக உழைத்தவர்கள், இன்று தாய்க் கழகத்தில் மிகப்பெரிய பொறுப்புகளில், நாடாளுமன்ற உறுப்பினர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, அணிகளில் வேலை பார்ப்பது தாய்க் கழகத்திற்கு செல்வதற்கு முன்பு நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிக்களம் என்று பணிகளை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் கட்டுப்பாட்டில் 100 வாக்குகளை வைத்திருந்தீர்கள் என்றால், உங்களைத் தவிர்த்துவிட்டு யாராலும் இருக்க முடியாது. நம்மிடம் சரியான கொள்கை இருக்கிறது. நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, இந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளை செய்து இருக்கிறது. இந்த தேனி மாவட்டத்தில் இருக்கின்ற மக்கள் பல பேர் கழக அரசின் திட்டத்தால் பயன்பெற்று இருக்கிறார்கள். இதையெல்லாம் மக்களிடம் கொண்டுபோய் நீங்கள் சேர்க்க வேண்டும். மக்களுடன் பேசி, மக்களுடன் நேரடி தொடர்பில் நீங்கள் இருக்க வேண்டும்.

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இட்ட முதல் கையெழுத்து பெண்களுக்கான விடியல் பயணம் திட்டம். இந்த 4 வருடத்தில், தேனி மாவட்டத்தில் மட்டும் 33 கோடி பயணங்களை தாய்மார்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் குறைந்தது 900 ரூபாயிலிருந்து,1,000 ரூபாய் வரை விடியல் பயணம் திட்டத்தின் மூலம் சேமித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது நமது அரசு. அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க கல்லூரிக்குச் செல்லும் மாணவியாக இருந்தால் புதுமைப்பெண் திட்டம், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டம். ஒவ்வொரு வீட்டில் இருந்தும் குழந்தைகள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று இத்திட்டங்களின் மூலம் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் மட்டும் 13 ஆயிரம் மாணவர்கள் இந்த இரண்டு திட்டங்களின் மூலம் மாதந்தோறும் பயன்பெற்று வருகிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் முக்கியத்துவம் பலருக்கு புரிவது இல்லை. என் குழந்தைக்கு காலை உணவு அளிக்க முதலமைச்சர் இருக்கிறார் என்று ஏழை, எளிய தாய்மார்கள் மகிழ்ச்சியாக குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகிறார்கள். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற 22 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் இந்தத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். தேனி மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 12 ஆயிரம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் காலை உணவு திட்டத்தால் பயன்பெற்று வருகிறார்கள்.

### மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகத்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். நமது தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தோம். ஆனால், நிதி நெருக்கடி காரணமாக உடனே இத்திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்த திட்டத்தை நிறைவேற்றவே முடியாது என்று சொன்னார்கள். ஆனாலும், அதை நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடத்திற்கு முன்பே நிறைவேற்றிக் காட்டினார்.

அந்த திட்டத்திற்கு விண்ணப்பித்தது 1 கோடியே 60 லட்சம் மகளிர். அதை பரிசீலனைச் செய்து 2 வருடமாக 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு தலைவர் அவர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். சில இடங்களில் இந்த உரிமைத்தொகை எங்களுக்கு கிடைக்கவில்லை என்று சில இடங்களில் புகார் வருகிறது. அதையும் சரிசெய்து நிச்சயமாக தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கொடுக்கப்படும் என்று தலைவர் அவர்கள் சட்டசபையில் அறிவித்தார்.

ஜூலை 15-ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று இப்போது தஞ்சாவூரில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த தேனி மாவட்டத்தில் மட்டும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் 2 லட்சத்து 19 ஆயிரம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் நினைவுபடுத்த வேண்டும்.

மக்கள் விரைவில் மறந்து விடுவார்கள். மறதியை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, இதை தொடர்ந்து மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. மாணவர்களுக்காக ஒரு திட்டம், மகளிருக்காக ஒரு திட்டம், விவசாயிகளுக்காக ஒரு திட்டம் இப்படி ஒவ்வொருவரையும் பார்த்துப் பார்த்து நம் முதலமைச்சர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### பிரச்சாரம் செய்யுங்கள்

நம் சாதனைகளை துண்டறிக்கைகளாக அச்சடித்து மக்களிடம் கொடுங்கள். சின்ன, சின்னக் கூட்டங்கள் நடத்துங்கள். தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்துங்கள். ஆடம்பரமான செலவு எல்லாம் தேவையே இல்லை. ஒரு சின்ன மேடை, 50 சேர், மைக், லைட் அதற்கான அனுமதியை வாங்கிகொண்டு உங்களின் தெருக்களிலேயே தெருமுனைக் கூட்டங்களை நடத்துங்கள். திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருங்கள்.

களத்திற்கு இணையாக, சமூக வலைத்தளத்திலும் சிறப்பாகச் செயல்பட வேண்டிய காலச்சூழலில் நாம் இருக்கிறோம். ஏனென்றால், சமூக வலைதளத்தில்தான் இன்றைக்கு கட்டுக் கதைகளை பரப்புகிறார்கள். ஒவ்வொரு நாளும் என்ன தலைப்பு என்பதை சமூக வலைதளத்தில்தான் தேர்வு செய்கிறார்கள். அதிலும் பார்த்தீர்கள் என்றால், உண்மைச் செய்திகளை விட, பொய்ச்செய்திகள், வதந்திகள்தான் அதிகமாக பரவுகின்றன. உண்மை நடந்து வந்ததென்றால், பொய் பறந்து சென்று விடுகிறது. அந்த அளவிற்கு வதந்திகளை எதிர்கட்சிகள் பரப்புகிறார்கள். நம்மிடம் சொல்வதற்கு உண்மை இருக்கிறது, கொள்கை இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் புரிந்துகொண்டு, உள்வாங்கி சமூகவலைத்தளத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உங்கள் பகுதியில் இருப்பவர்களிடம் நெருங்கிப் பழகுங்கள். அவர்களின் கோரிக்கையை கேளுங்கள். அந்த கோரிக்கைகளைச் செய்து முடிக்கிறீர்களோ இல்லையோ காது கொடுத்து கேளுங்கள். உங்களால் முடிந்தால் அதை செய்து கொடுக்க முயற்சி செய்யுங்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் சொல்லி அதை செய்துத்தர முடியுமா என்று பாருங்கள். மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். உங்களின் அணி அமைப்பாளர்களிடம் அதைச் சொல்லுங்கள். உங்களுக்குள் ஒரு சின்னச் சின்ன பிரச்சினைகள் இருக்கலாம். அந்த பிரச்சினைகள் எல்லாம் பேசி சரிசெய்யக்கூடியவைதான்.

இப்போதுகூட தலைவர் அவர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை எல்லாம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொடர்ந்து பார்த்து வருகிறார்கள். தலைவர் அவர்கள், அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து ஆலோசனை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். நமக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு கழகப் பணியைச் செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சரியாக 10 மாதங்கள்தான் இருக்கிறது. அடுத்து வருகின்ற ஒவ்வொரு மணித்துளியும், ஒவ்வொரு மணி நேரமும் கோல்டன் நேரம் என்பதை நீங்கள் உணர வேண்டும். கழகத்திற்கு ஆதரவாக இருக்கின்ற வாக்காளர்களை நீங்கள் தக்க வைக்க வேண்டும். புதிய வாக்காளர்களை, கழக ஆதரவாளர்களாக நீங்கள் மாற்ற வேண்டும்.

### ஒன்றாக வருகிறார்கள்

மீண்டும் நமக்கு எதிராக, கடந்த சென்ற சட்டமன்றத் தேர்தலைப் போல அ.தி.மு.க-வும், பா.ஜ.க-வும் ஒன்றாக வருகிறார்கள். 2021-இல் தமிழ்நாட்டு மக்கள் இந்த கூட்டணியை விரட்டி அடித்தார்கள். 2026-லும் விரட்டி அடிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அந்த முயற்சியை நாம்தான் மக்களிடம் எடுத்துச் சென்று சேர்க்க வேண்டும். ஆகவே, நம் வேலை சுலபம். அணியில் பொறுப்பு வாங்கிவிட்டோம் என்று மெத்தனப்போக்கில் இருந்துவிடக்கூடாது. நாம் நம் பணியை சரியாக செய்துகொண்டு இருக்க வேண்டும்.

பா.ஜ.க-வோடு 2026 மட்டுமல்ல, 2036-லும் கூட்டணி கிடையாது என்று சொன்னவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள். அவர் சொல்லி இரண்டு, மூன்று மாதத்திலேயே டெல்லிக்குச் சென்று, இரண்டு மூன்று கார்கள் மாறிச் சென்று திருட்டுத்தனமாக பார்த்துவிட்டு வந்தவர்தான எடப்பாடி பழனிசாமி அவர்கள். அந்த கூட்டணியைக்கூட அவரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. அமித்ஷா தான் சென்னை வந்து தொலைக்காட்சியில் அந்த கூட்டணியை அறிவிக்கிறார். சமீபத்தில்கூட உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் மதுரைக்கு வந்தார். வழக்கம்போல் நம் கழகத்தைப்பற்றி, பொய்ச்செய்திகள், ஏராளமான குற்றச்சாட்டுகளை எல்லாம் வைத்துவிட்டு சென்றார்.

தமிழ்நாட்டில் ஊழல் அதிகமாக இருக்கிறது என்று சொல்வது யார் என்று பார்த்தீர்கள் என்றால் பா.ஜ.க. இப்போது கூட்டணி பார்த்தீர்கள் என்றால் அ.தி.மு.க-வுடன் கூட்டணி. ஊழல் வழக்கில் பலமுறை தண்டிக்கப்பட்ட வரலாறு அ.தி.மு.க. இயக்கத்திற்கு உண்டு. அவர்களுடன் கூட்டணி வைத்துள்ள அமித்ஷா அவர்களுக்கு நம்மைப் பார்த்து குறை சொல்வதற்கு ஏதாவது ஒரு தரம் இருக்கிறதா என்று யோசித்து பார்க்க வேண்டும்.

### கணக்கு கொடுக்கவில்லை

பா.ஜ.க தொடர்ந்து 11 ஆண்டுகள் ஆட்சியில் இருக்கிறார்கள். அவர்களின் ஊழல்களைப் பற்றி பேச வேண்டும். பா.ஜ.க-வின் ஊழலைப் பட்டியல் போட வேண்டும் என்றால், அதற்கென்று தனியாக ஒரு புத்தகமே போடலாம். மத்தியப் பிரதேசத்தில் ஆசிரியர்கள் நியமனத்தில் ஊழல், போர் விமானங்களை வாங்குவதில் ரஃபேல் ஊழல், ஹிண்டன்பொர்க் அம்பலப்படுத்திய அதானி ஊழல் என பல ஊழல்கள் நடந்துள்ளன. கோவிட் நேரத்தில் மக்களிடம் வசூல் செய்த பி.எம்.கேர்ஸ் நிதிக்கு இன்றுவரை கணக்கு கொடுக்கவில்லை.

இறந்து போனவர்களுக்கு மருத்துவ காப்பீடு கொடுத்த ஆயுஸ்மான் பாரத் இன்சூரன்சில் ஊழல் நடந்திருக்கிறது. ப்ரீடம் 251 மேக் இன் இந்தியா என்று ஒன்றை விளம்பரம் செய்தார்கள். அதாவது 251 ரூபாய்க்கு ஸ்மார்ட் போன் தருகிறோம் என்று சொல்லி நாடு முழுக்க வசூல் செய்தார்கள். இன்றைக்கு வரைக்கும் ஒருவருக்குகூட ஒரு குறுச்செய்திகூட அனுப்பவில்லை. அதுதான் பா.ஜ.க-வின் ஊழல்கள். இதையெல்லாம் மக்களிடம் கொண்டு போய் நாம் சேர்க்க வேண்டும். உள்துறை அமைச்சர் அமித்ஷா நம்மை குறை சொல்கிறார். ஆனால், ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசை தொடர்ந்து பாராட்டிக்கொண்டு இருக்கிறது. நிதி ஆயோக்கில் ஆரம்பித்து, ஒன்றிய அரசின் அமைப்புகள், அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்று பாராட்டி வருகின்றன.

9.69 சதவிகித வளர்ச்சியுடன் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முதல் இடத்தை பிடித்து இருக்கிறது என்றால், அதற்கு நம் முதலமைச்சர், தலைவர் அவர்கள் ஆட்சியின் சாதனைகள்தான் காரணம். இந்த வளர்ச்சி பிடிக்காமல்தான், தமிழ்நாட்டை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்று சங்கிகளும், சங்கிகளோடு சேர்ந்து அடிமைகளும் சூழ்ச்சி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### மக்கள் ஏற்கமாட்டார்கள்

மும்மொழிக் கொள்கை என்று கொண்டு வந்துள்ளார்கள். புதிய கல்விக்கொள்கை திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் பள்ளிக் கல்வித்துறைக்கு கொடுக்க வேண்டிய 2 ஆயிரத்து 500 கோடியை தருவோம் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாகச் சொல்கிறார். நீ பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தால்கூட உன் பணம் எனக்கு தேவையில்லை, உங்களின் புதிய கல்விக்கொள்கையை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெளிவாகச் சொன்னவர் நம் முதலமைச்சர் அவர்கள். இதையெல்லாம் நீங்கள் உள்வாங்கிக் கொள்ளுங்கள்.

இப்போது அ.தி.மு.க. மட்டும் தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்தால் என்ன நடந்திருக்கும் என்று பாருங்கள். நம்மில் பாதிபேர் இந்தி பேசிக்கொண்டு இருந்திருப்போம். அந்த நிலைமையை உருவாக்கி இருப்பார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். ஒரு கையெழுத்து என்ன, நானே டெல்லிக்கு வந்து 10 கையெழுத்து போடுகிறேன் என்று சொல்லி சென்று வந்திருப்பார். அப்படிப்பட்டவர்தான் எடப்பாடி பழனிசாமி என்பதை, தமிழ்நாட்டு மக்களுக்கு நாம் தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

தொகுதி மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள். மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளை குறைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இப்போது 39 எம்.பி.கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். தொகுதி மறுவரையறை மட்டும் வந்தால் 7-லிருந்து 9 தொகுதிகள் தமிழ்நாட்டில் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இப்படி மாநில உரிமைகள் அனைத்தையும் பறிக்கின்ற வேலையை ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு செய்துகொண்டே இருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்துகொள்ளுங்கள்.

கீழடி ஆய்வையும் கொச்சைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். கீழடியைப் பார்த்தால் அவர்களுக்கு வயிறு எரிகிறது. ஏனென்றால், அவர்களின் ஆரிய வரலாற்றை அடித்து நொறுக்குகின்ற வகையில், நம் கீழடி வரலாறு இன்று இருந்துகொண்டு இருக்கிறது.

### தொன்மையான நாகரிகம்

உலகத்திலேயே மிகவும் பழமை வாய்ந்த, தொன்மையான நாகரிகம் நம் நாகரிகம். அறிவியலும் - ஆய்வுகளும் சொல்கிறது. அதை ஏற்றுக்கொள்ள பாசிஸ்ட்டுகளுக்கு மனது வரவில்லை. எனவே, இதற்கெல்லாம் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்றால் மீண்டும் நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சிக்கட்டிலில் அமர வேண்டும், இரண்டாவது முறையாக நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும். அதற்கு இங்கு வந்திருக்கின்ற சார்பு அணிகள், நீங்கள் அத்தனைப்பேரும் உறுதுணையாக இருக்க வேண்டும். அதை மெய்ப்பிக்கின்ற வகையில் நிச்சயம் உங்களின் பணிகள் இருக்க வேண்டும்.

தேர்தல் என்று வந்துவிட்டால், கலைஞரின் உடன்பிறப்புகள், சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு தீயாக வேலை பார்ப்பார்கள் என்று பெருமையாகச் சொல்வார்கள். அதை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு வந்து இருக்கிறது. எனவே, தலைவர் அவர்கள் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற உறுப்பினர் சேர்க்கை முன்னெடுப்பை அறிவித்திருக்கிறார். அதை நாம் தொடங்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பூத்திலும் இருக்கின்ற வாக்காளர்களில் 30 சதவிகிதப் பேரை நம் கழகத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும். தயவுசெய்து வீட்டில் இருந்துகொண்டு அந்த முன்னெடுப்பை நாம் நடத்தக்கூடாது. களத்தில் இறங்கி ஒவ்வொரு வாக்காளராக சந்தித்து அந்த முன்னெடுப்பை நடத்த வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பணிகளை எல்லாம் சார்பு அணிகள் எப்படி செய்ய வேண்டும் என்று மாவட்டக் கழகத்தில் இருந்து உங்களுக்கு சொல்வார்கள். உங்களின் பணிகள் சிறப்பாக இருந்தால், தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பையும் தலைவர் அவர்கள் நிச்சயம் வழங்குவார். சார்பு அணிகள் நாங்கள் இறங்கி வேலை செய்து இருக்கிறோம். எங்களுக்கான வாய்ப்பை கொடுங்கள் என்று நிச்சயம் தலைவரிடம் அந்த வாய்ப்பை நான் பெற்றுத் தருவேன். அதற்கு நீங்கள் உங்களின் தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### நாம் ஒரே அணிதான்

இன்றைக்கு நாம் 23 அணிகளாகப் பிரிந்து இருக்கிறோம். பேருக்குதான் இளைஞர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணி இப்படி பல அணிகளாகப் பிரிந்து இருக்கிறோம். ஆனால், செயல்பாடு என்று வந்துவிட்டால் நாம் ஒரே அணிதான். அது கலைஞர் அணிதான். நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அணிதான் என்பதை நீங்கள் மனதில் வைத்து பணியாற்ற வேண்டும்.

போருக்குச் செல்வதற்கு முன்பு, எல்லோரும் ஒரே நேரத்தில் சென்றுவிட்டோம் என்றால் சண்டை போட முடியாது. நம்மை எளிதாக வீழ்த்தி விடுவார்கள்.

அதனால், ஒரு நல்ல அரசன் தன் படைகளை அணி, அணியாகப் பிரித்து போருக்கு அனுப்பும்போது, அந்த போரில் வெற்றி சுலபமாக இருக்கும். அதேபோல் நாமும் அணி அணியாக சென்று பத்து தோல்வி பழனிசாமியை, பதினொரு தோல்வி பழனிசாமியாக ஆக்க வேண்டும். அ.தி.மு.க-வோடு சேர்ந்து பா.ஜ.க-வையும் வீழ்த்த வேண்டும். அதில் களப்பணியாளர்களாக நீங்கள் முதல் வரிசையில் நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ‘தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்’ என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் இராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணகுமார், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மூக்கையா, தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கம்பம் செல்வேந்திரன், தீர்மானக் குழுவின் இணைச் செயலாளர் ஜெயக்குமார், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, கொள்கை பரப்புக்குழு துணைச் செயலாளர் கம்பம் பாண்டியன், தொகுதிப் பார்வையாளர் முத்துராமலிங்கம் உள்ளிட்ட கழக சார்பு அணிகளைச் சேர்ந்த பலரும் பங்கேற்றனர்.